# 25. ஓரினச்சேர்க்கை

**தவறான தனித்தன்மையின் வகை**

ஒருவர் தம்மைப் போன்ற அதே பாலியரால் வசீகரிக்கப்படும்பொழுது குழப்பம் ஏற்பட்டு பாலியலின் தனித்தன்மை கேள்விக்குறியாகிறது. ஓரினச்சேர்க்கையைப் பற்றிய தேவனுடைய திட்டத்தை தெரியாமலோ அல்லது அதை மறுத்து விட்டாலோ, மக்கள் மணலுக்குள் அமிழ்ந்து போவது போலக் காணப்படுவார்கள், மிகவும் துக்கமான பயங்கரமான பின் விளைவுகள் ஏற்படும்.

ஓரினச்சேர்க்கை கவர்ச்சியானது. ஒரு தனி நபரில் தேவன் சிருஷ்டித்த உண்மையான தனித் தன்மையை வெளிப்படுத்துவதில்லை. மாறாக, அது ஒரு தவறான தனித்தன்மையில் *(mistaken identity)* முடிவடைகிறது. இது ஒரு உண்மையான தேவையை ஏற்படுத்துகிறது. - அதாவது, தேவனுடைய உண்மையைத் தேடுகிறது. இயேசு, சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32) என்று கூறினார்.

## ஓரினச்சேர்க்கைபற்றி வேதாகமம் கூறுவது என்ன?

தேவனுடைய பார்வையில் சரியானது எது என்று அறிந்து கொள்ளுவதற்கு வேதாகமத்தின் உண்மைகளை அறிந்து கொள்வதும், தேவனுடைய குணாதிசயங் களைப் புரிந்து கொள்வதும் அவசியமாகிறது. தேவனுடைய மற்ற எல்லா குணாதிசயங்களையும் விட்டுவிட்டு, ஒரே ஒரு தன்மையை மட்டும் முக்கியப்படுத்துவது சரியான மதிப்பீட்டைக் கொடுக்காது. நீங்கள் தேவனுடைய பரிசுத்தத்தின் அளவில் வாழுவதை விட்டு, அவரை அன்புள்ளவராக மட்டும் பார்க்கிறீர்களா? அல்லது நீங்கள் அவரைப் பரிசுத்தமான நியாயாதிபதியாக மட்டும் பார்த்து, மனிதரின் பலவீனத்தைப் பார்த்துப் பரிதபிக்காத ஒருவராகக் காண்கிறீர்களா? 1 யோவான் 4:16-ல் "தேவன் அன்பாக இருக்கிறார்" என்று வாசிக்கிறோம். சங்கீதம் 99:9 "தேவன் பரிசுத்தர்" என்று கூறுகிறது. அவர் நம் எல்லோரையும் பாலியல் பாவங்களிலிருந்து விலகி, வேறு பிரிக்கப்பட்ட, பரிசுத்தமான வாழ்க்கை வாழவே அழைக்கிறார்.

*"உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர்;*
*ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்"*
(லேவியராகமம் 19:2).

### ஓரினச்சேர்க்கை பாவமா?

'ஆம்' என்பதே பதில். வேதாகமத்தின் பல பக்கங்களில் இது எழுதப் பட்டுள்ளது.

*"ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறது போல்,*
*ஆணோடே சம்யோகம் பண்ணினால், அருவருப்பான காரியம்*
*செய்த அவ்விருவரும் கொலை செய்யப்படக் கடவர்கள்;*
*அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருப்பதாக"*
(லேவியராகமம் 18:22)
(ஆதியாகமம் 19:4-7; லேவியராகமம் 20:13 பார்க்கவும்).

### ஓரினச்சேர்க்கையால் சோதிக்கப்படுவது பாவமா?

'இல்லை', இயேசு 'எல்லாவிதத்திலும்' சோதிக்கப்பட்டார். ஆனால், அவர் பாவம் செய்யவில்லை (எபிரெயர் 4:15).

### யாராவது பிறவியிலேயே ஓரினச்சேர்க்கையாகப் பிறக்கிறார்களா?

'இல்லை', ஓரினச்சேர்க்கை என்பது ஒரு நடத்தை. அதற்குத் தனித்தன்மை கிடையாது. விஞ்ஞானத்தின் சோதனைகள் கூட 'ஓரினச்சேர்க்கை' என்ற மரபணுவை ஆதரிக்கவில்லை. அது அவர்களை ஓரினச்சேர்க்கைக்கு நடத்தாது. இந்த ஓரினச் சேர்க்கை எனும் பாவத்திற்கு வழி நடத்தும் இரண்டு முக்கிய காரியங்கள் சுற்றுச்சூழலும், அதாவது ஒரு பிள்ளை வளர்ந்த சூழ்நிலையும், அந்த பிள்ளை அந்தச் சூழ்நிலையில் எவ்வாறு நடந்து கொண்டதோ அதுவுமே காரணங்களாகும்.

### ஓரினச்சேர்க்கை சிலருக்கு 'இயற்கையிலேயே' உள்ளதா?

இயற்கைக்கு மாறான விருப்பம் உள்ளவர்கள் இயற்கைக்கு மாறான நடத்தையை இயற்கையானது என்று எண்ணினால், ஒரே இனத்தாரிடம் காணப்படும் பாலியல் உறவுகள், இயற்கைக்கு மாறானவை, இழிவானவை என்று வேதாகமம் திட்டவட்டமாகக் கூறுகிறது. அது தேவனுடைய சிருஷ்டியைவிட்டு நெறி தவறுவது என்பதாகும்.

> *"இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே, ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்; அந்தப்படியே அவர்கள் பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும், பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்"*
> (ரோமர் 1:24-27).

### ஓரினச்சேர்க்கை அபாயகரமானதா?

ஆம். ஆரோக்கியத்தைப் பொறுத்த வகையில், ஓரினச்சேர்க்கை என்பது வேதனைக்குரிய ஒன்று. அது அபாயகரமானதுமாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் ஒன்பது சதவீத ஆண்கள் எய்ட்ஸினால் அவதியுறுகின்றனர். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுகிறவர்களில் 0.3 சதவீதம் மட்டும் தன் பாலரல்லாதவருடன் உறவு கொள்கின்றனர். பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தின்படி சுமார் 2லிருந்து 4 சதவீதம் வரை ஜனத்தொகையில் ஓரினச்சேர்க்கை மனிதர் உள்ளனர்.

எனினும் .....

அவர்களில் .....

- 17 சதவீதம் கோனாரியாவைச் (gonorrhea) சார்ந்தவை
- 85 சதவீதம் பாலியல் தொடர்பால் பரவக்கூடிய தோல் வியாதி உள்ளவர்கள். (syphilis)
- 42 சதவீதம் புதிய HIV தொற்றுநோய்
- 55 சதவீதம் AIDS நோய் - (5 சதவீதம் ஓரினச்சேர்க்கையாலும், 22 சதவீதம் போதை மருந்துகளாலும் உண்டாகிறது)

அவர்கள் .....

- *சுகமே பெற முடியாத* 5 மடங்கு வலுவான புணர்ச்சி கடத்து வியாதியினால் (STD) பாதிக்கப்பட்டுள்ளனர். (மூன்றில் ஒரு ஓரினச்சேர்க்கையர் சுகமளிக்க முடியாத STD வியாதி உள்ளவர்கள்). இது புற்று நோயுடன் தொடர்புடையது.
- ஒரு ஓரினச்சேர்க்கையாளரால் 50,000க்கும் அதிக அளவில், சுகமளிக்க முடியாத அளவு அது பரவுகிறது. ('வெறுக்கப்படத்தக்க குற்றம்' என்று சொல்லப்படுவதில் 39 சதவீதம் ஓரினச்சேர்க்கையாளராலும் 22 சதவீதம் அவர்களுடைய துணைகளாலும், 5 சதவீதம் ஒரு பலவந்தமான பாலியல் பலாத்காரத்தாலும் ஏற்படுகிறது.)

**அவர்கள் கீழ்க்கண்ட விதத்தில் பெரிய அளவில் பாதிக்கப்படுகிறார்கள் ...**

- சாப்பிடுவதில் ஒழுங்கீனம், கவலை, மனநிலையில் ஒழுங்கின்மை.
- எதிலும் துஷ்பிரயோகம், சோர்வு, தற்கொலை.
- மறைவிடங்களில் புற்றுநோய், அல்லது சில பாகங்களில் புற்றுநோய் - மரணம்.
- எட்டு வருடம் முதல் 20 வருடங்களுக்குள் அகால மரணம்.

கணக்கெடுப்புகள் ஒரு சில காரியங்களைத்தான் தெரிவிக்கின்றன. ஆனால் அவை பேரழிவுக்கான, எதிர்மாறான பாலியல் பாவத்தை விளக்குகின்றன. (1 கொரிந்தியர் 6:18).

## தேவன் எதைத் தருகிறார்?

### தேவன் நம்பிக்கை தருகிறார்

ஓரினச்சேர்க்கையினர் திருச்சபையால் கண்டனம் செய்யப்படுவதாக உணருகிறார்கள். கிறிஸ்தவர்கள் எல்லோரையும் நேசிக்க அழைக்கப்பட்டிருந்தாலும் (ஓரினச்சேர்க்கையாளரையும்) அநேக கிறிஸ்தவர் ஓரினச்சேர்க்கையாளர்களை நேசிப்பதில்லை. அதே சமயம், கிறிஸ்தவர்கள் பாவத்தைக் குறித்த உண்மையை யாவருக்கும் தெரிவித்து, அவர்கள் தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவும், அவரது மன்னிப்பை அனுபவிக்கவும் அவரால் அவர்கள் பாவத்தை விட்டு விட உதவி செய்ய முடியும் என்பதையும் கூற வேண்டும். இது அன்பற்ற நியாயந்தீர்த்தல் அல்ல, நம்பிக்கையூட்டும் நற்செய்தியாகும். தேவன் மன்னிப்பை வழங்குவதோடு, மாற்றமடைந்த ஒரு வாழ்க்கை வாழவும் பெலன் தருகிறார். விபச்சாரம் செய்த தாவீது, எப்படி விடுதலை பெறலாம் என்ற இரகசியத்தை அறிந்திருந்தான். அத்துடன் எவ்வாறு அதிலிருந்து தப்பி வாழலாம் என்றும் அறிந்திருந்தான்.

*"வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் பண்ணுவான்?*
*உமது வசனத்தின்படி வாழுவதினால்தானே! உம்மை*
*என் முழு இருதயத்தோடும் தேடுகிறேன். உமக்கு விரோதமாய்ப்*
*பாவம் செய்யாதபடி உமது வாக்கை*
*என் இருதயத்தில் வைத்து வைத்தேன்"*
(சங்கீதம் 119:9-11).

ஒத்துப்போகும் வாழ்க்கை (life of compromise) ஒரு போதும் திருப்தி தராது என்பதையும், தேவனுடைய கோட்பாடுகளுக்குள் அடங்கி இருந்தால் சமாதானம் கிடைக்கும் என்றும் தாவீதின் வார்த்தைகளும், வாழ்க்கையும் நமக்குத் தெரிவிக்கின்றன. புதிய, பழைய ஏற்பாடுகள் இரண்டிலுமே ஓரினச்சேர்க்கையைப்பற்றிய ஆவிக்குரிய பிரமாணம் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது.

## வேதாகமத்தின் பிரமாணம்

*"சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர் முதல் கிழவர் மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலிருந்தும் வந்து, வீட்டைச் சூழ்ந்து கொண்டு, லோத்தைக் கூப்பிட்டு, இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டு வா என்றார்கள்... சகோதரரே, இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம்"*
(ஆதியாகமம் 19:4-5, 7).

*"ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறது போல, ஆணோடே சம்யோகம் பண்ணினால் அது அருவருப்பான காரியம்"*
(லேவியராகமம் 20:13).

*"உன் வீட்டிலே வந்த அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு வெளியே கொண்டு வா... இப்படிச் செய்ய வேண்டாம் என் சகோதரரே, இப்படிப்பட்ட பொல்லாப்பைச் செய்ய வேண்டாம்"*
(நியாயாதிபதிகள் 19:22-23).

*"வேசி மார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும்... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை"*
(1 கொரிந்தியர் 6:9-10).

***விவாதம் :***

இன்றைய நாட்களின் ஒழுக்க நெறிகள் வேதாகமத்தின் நன் நடத்தைக்கு ஒத்தவை அல்ல. புதிய ஏற்பாட்டு உண்மைகள் பழைய ஏற்பாட்டின் உண்மைகளுக்கு ஒத்திருக்கின்றன. ஓரினச்சேர்க்கைபற்றிய கருத்துக்கள் மாறிவிட்டன. இது ஒரு ஸ்திரீ தலையை மூட வேண்டும் என்ற கட்டளையை இப்போது பலர் கைக்கொள்வதில்லை. அதைப்போல் மாறிவிட்டது. (1 கொரிந்தியர் 11:6 பார்க்கவும்).

***பதில் :***

கலாச்சாரங்கள் மாறலாம். ஆனால், வேதாகமத்துக்கடுத்த ஒழுக்க நெறிகள் மாறவில்லை. புதிய ஏற்பாட்டின் உண்மைகள் பழைய ஏற்பாட்டு உண்மைகளுக்கு ஒத்ததாகவே இருக்கின்றன. தேவனுடைய நடைமுறைகள் மாறுமானால், தேவன் மாறுகிறவர் என்பது தானே பொருள்படும்? தேவனே கூறியிருக்கிறார், "நான் கர்த்தர், நான் மாறாதவர்" (மல்கியா 3:6).

## ஒரு மனிதனை ஓரினச்சேர்க்கைக்கு நடத்தும் காரியங்கள் எவை?

ஒருவனை ஓரினச்சேர்க்கைக்கு நடத்துவதற்கு அநேக காரணங்கள் உண்டு. கீழ்க்கண்ட மூன்று பொதுவான காரணங்களே ஒரு மனிதனை ஓரினச்சேர்க்கை முறைக்கு நடத்துகின்றன.

**1. அவன் பலவீனமான, வீட்டில் அதிகமாக நேரத்தைச் செலவழிக்காத தன் தகப்பனுடன் அடையாளம் காட்டுவதில் விருப்பப்படுவதில்லை. பெண்களை விரும்பத்தகாதவர்களாகக் காண்கிறான்.**

- தகப்பன் பெலவீனமுள்ள, சக்தியற்ற ஒருவர். ஆகவே, தாயார் அதிகாரம் செலுத்துகிறார்கள்.
- தனது தாயார் குடும்பத்தை ஆட்சி செய்வதை அனுமதிப்பதற்காகத் தகப்பனைக் குற்றந்தீர்க்கிறார்கள்.
- எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டுக்குள்ளும் அதிகாரத்திற்குள்ளும் வைத்திருக்கும் தனது தாயாரினால், பெண்களிடமிருந்து ஒதுங்கி வாழ்கிறான்.
- கற்பனையில், தன் பலவீனமான தகப்பனை விடுவிக்கத் தன் தாயுடன் பாலுறவு கொள்ளுகிறான். தாய்க்கு "வாழ்க்கைத் துணையாக" கணவன் இருப்பதை வெறுக்கிறான்.
- உணர்வினால் தாயிடமிருந்து ஏற்பட்ட பிரிவினாலோ அல்லது மது அருந்தும் தாயினோடு வாழ்ந்த வெறுப்புற்ற மன நிலையினாலோ பெண்களிடமிருந்து கொஞ்சம் விலகி வாழ்கிறான்.

முடிவு:

அவர் தன்னையறியாமலேயே *பெண்கள் பாதுகாப்பற்றவர்கள், ஆண்களிடமே நான் அன்புக்காக எதிர்பார்ப்பேன்* என்று முடிவெடுத்து விடுகிறார். தனது வாழ்வில் ஏற்பட்ட உணர்வின் வெற்றிடத்தில், ஆண்களினால் வசீகரிக்கப்படுகிறார். அவர்கள் பலமுள்ளவர்களென்று கருதுகிறார். இவ்விதமாய் அவர் ஓரினச்சேர்க்கை என்றதில் அமிழ்ந்து போகிறார். இவர்கள் உணர்வில் காயப்பட்டவர்கள்.

*"தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை*
*ஆசீர்வதியாமலுமிருக்கிற சந்ததியாருமுண்டு"*
(நீதிமொழிகள் 30:11)

**2. உறுதியில்லாத தனது தகப்பனோடு தனக்கு எந்த விதப் பிணைப்புமில்லை**

- தனது தகப்பனாருடைய ஆண்மைக்குத் தான் ஒருபோதும் வரமுடியாது என நினைக்கிறான்.
- விளையாட்டு வீரரான தன் தகப்பனாருக்குத் தனது கலை நுட்பமும், பெண்ணின் குணாதிசயங்களும் ஒரு ஏமாற்றத்தைத் தருகின்றன.
- தனது ஆண்மை நிறைந்த சகோதரரைப் பார்த்துப் பொறாமையடைகிறான். தனக்குள் ஆண்மை மறுக்கப்பட்டதைக் காண்கிறான்.
- அன்புக்கும், ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கும் பதிலாகப் பணத்தையோ, வெகுமதிகளையோ கொடுப்பதைத் தவறென்று கோபித்துக் கொள்ளுகிறான்.
- வீட்டிலும், நண்பர் நடுவிலும் தான் ஒரு தோல்வியுற்ற ஆண்மகன் என்று கருதுகிறான்.
- அவனது சகோதரர்கள் அவனைத் தள்ளிவிட்டதால் தன்னை போஷித்து வளர்க்கும் தாயாரையும், தனது சகோதரிகளையும் சார்ந்து கொள்ளுகிறான்.

முடிவு:

தன்னையறியாமலேயே ஒரு முடிவுக்கு வருகிறான். *"நான் ஒரு புதிய வீட்டைக் கண்டு பிடிக்க வேண்டும்."* தன்னை ஏற்றுக் கொண்டு தனக்கு முக்கியத்துவம் தரக்கூடிய ஒரு

தகப்பன் வேண்டுமென்று வாஞ்சிக்கிறான். தகப்பன்மார் தங்களுடைய பிள்ளைகளிடத்தில் காட்டும் நடத்தையிலும், செயல்களிலும் கவனமாக இருக்க வேண்டுமென்று வேதாகமம் எச்சரிக்கிறது (எபேசியர் 6:4).

**2. தனது வாழ்வில் முக்கியமான ஒருவர்மூலம் தவறாக நடத்தப்பட்டதால், அவன் உணர்வைப் பொறுத்த வரையில் ஒரு உறுதியான, ஆரோக்கியமான ஆணுடன் தொடர்பில்லை.**

- தகப்பன் கடுமையானவர், தன்னைத் தள்ளிவிடுபவர் என்று நினைத்துக் கோபமடைகிறான்.
- தன் குடும்பத்தைக் கைவிட்டு வேறு இடத்தோடு தொடர்பு கொண்டுள்ள தனது தகப்பனை வெறுக்கிறான்.
- மத சம்பந்தமான நம்பிக்கையை ஆதரித்து அவைகளின்படி வாழாமல், மாய்மாலமாக நடக்கும் தகப்பனுக்கு எதிர்த்து நிற்கிறான்.
- பன்னிரண்டு வயதாகும் முன்பே, மற்றொரு ஆணால் பாலியலில் ஈடுபடுத்தப்பட்டதால், பாலியல் குறித்துக் குழப்பமடைகிறான்.
- கெட்ட வார்த்தைகளைப் பேசும் தன் குடிகாரத் தகப்பனோடு உறவு வைத்துக் கொள்ள மறுக்கிறான்.
- சிறிய வயதில் பிற ஆண்களால் துன்புறுத்தப்பட்டு, வெறுக்கப்பட்டதால், தனது ஆண் தன்மையை வெறுக்கிறான்.

முடிவு:

தன்னையறியாமலேயே ஒரு முடிவுக்கு வருகிறான். *"இது தான் ஒரு மனிதனுடைய வாழ்க்கையானால், நான் ஒரு பெண்ணாக இருக்கவே விரும்புகிறேன்."* இப்படியாகத் தனது விபரீதமான எண்ணங்களால், தனது ஆண்பால் என்ற நிலையைவிட்டு பெண்பாலாக இருக்கும் பாதுகாப்பை விரும்புகிறான்.

## பெண்களை ஓரினச்சேர்க்கைக்கு நடத்தும் காரியங்கள் எவை?

பெண் பிள்ளைகளை இந்தப் பாவமான உறவுக்கு நடத்தப் பற்பல காரணங்கள் உள்ளன. முக்கியமான மூன்று காரியங்களை இங்கு பார்ப்போம்.

**1. தனது பலவீனமான தாயோடு தன்னை ஒப்பிடுவதில்லை**

- தனது தாயை ஒரு பலனற்ற, வல்லமையற்றவளாக, குடும்பத்தில் ஒரு பலியாடாகக் காண்கிறாள்.
- தனது தாயாரைக் குற்றப்படுத்தி, அவளோடு போட்டி மனப்பான்மையில் நடந்து கொள்ளுகிறாள்.
- விளையாட்டில் சிறந்து விளங்குகிறாள். ஒரு ஆண் போல விளையாடுகிறாள். இப்படியாகத் தனது பெண்மையை இழந்து விடுகிறாள்.
- ஆண்களோடு தன்னை ஒப்பிட்டுத் தன்னைப் பிறர் ஏற்றுக் கொள்ளும்படி, ஒரு ஆண் போல செயல்படுகிறாள்.
- தனது தாயாரைத் தள்ளிவிட்டு, தானே தாயாக செயல்படுவதால், ஒரு தாயாருக்காக ஏங்குகிறாள்.
- தனது தகப்பன் விபசாரக்காரனாயிருப்பதால், ஆண்கள் மேல் அவநம்பிக்கை கொள்ளுகிறாள். தகுதியான ஒரு தகப்பனுக்குரிய குணாதிசயங்களை அவளால் காணமுடியவில்லை.

- தகப்பனை இழந்த பின்பு, தனது தாயாரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் தகப்பனாக செயல்படுகிறாள்.

முடிவு:

தன்னையறியாமலேயே ஒரு முடிவுக்கு வருகிறாள். ஒரு பெண்ணாக இருப்பது இது தான் என்றால், நான் ஒரு ஆணாக இருக்க விரும்புகிறேன். இவ்வாறாகத் தனது பெண்மையை ஒதுக்கிவிட்டு, ஆண்களோடு தன்னை ஒப்பிட்டுக் கொள்ளுகிறாள்.

**இருதய வேதனையின் பலனாக, தனது உறவை ஓரினச்சேர்க்கையாக்கிக் கொள்ளுகிறாள்.**

**2. தன்னை சரியாக போஷிக்காத தன் தாயோடு தன்னை இணைத்துக் கொள்ளவில்லை**

- தனது தாயார் கடினமாகவும், அளவுக்கு மீறி கண்டிப்பாகவும் இருப்பதால், அவளை ஒரு போதும் திருப்தி செய்ய முடியாதென்று உணருகிறாள்.
- தன்னைத் தன் தாயார் சரியாகப் போஷிக்கவில்லை என்றும், அவளை ஒருபோதும் தான் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் உணருகிறாள்.
- மகன் பிறக்க வேண்டும் என்று வாஞ்சையாக இருந்த பெற்றோருக்குப் பிறந்ததால் அவளது பெற்றோர் ஏமாற்றமடைந்தார்கள் என்பதை உணருகிறாள்.
- தன் தகப்பனை விட மிக அதிகமாகக் காரியங்களை வெற்றியாக முடிக்கும் தன் தாயாரை அலட்சியம் செய்கிறாள்.
- குடும்பத்தை உடைத்துப் போட்டதற்காகத் தன் தாயாரைக் குறை கூறுகிறாள்.
- தான் நினைப்பதும், கூறுவதும், செய்வதும் எதுவுமே ஒன்றுமில்லை என்று கருதப்படுவதற்காகக் கோபமடைகிறாள்.
- தான் தாயாக முடியாது என்பதால், தன்னை ஒரு 'மறைந்துபோன' ஆள் போல எண்ணுகிறாள்.

முடிவு:

தன்னையறியாமலே இந்த முடிவுக்கு வருகிறாள். *'நான் ஒரு புதிய வீட்டைத் தேட வேண்டும்'.* தன் உணர்வுகளின்று விடுவித்துக் கொண்டு, ஒரு போலித் தாயைத் தேடி அவளுடைய உறவுகளை ஒரு தாயோடு வைத்துக் கொள்ளுகிறாள். தனது பிள்ளைகளை போஷித்து வளர்க்காத தாயானவள், ஞானமற்றவள், உணர்வுகளின்படி அழிவைக் கொண்டு வருபவள் (நீதிமொழிகள் 14:1).

**3. நடத்தை கெட்ட தன் தகப்பனாராலும், அல்லது மற்ற ஆண்களால் தவறாக நடத்தப்பட்டதாலும், அவளுக்கு ஆண்களைப் பிடிக்கவில்லை**

- அவள் தகப்பனார் அவளைப் பாலியல் பிரகாரமாக அல்லது தவறாக நடத்தியதாலும், குடிகாரத் தகப்பனின் வாழ்க்கையை வெறுத்ததாலும், ஆண்களை நம்புவதில்லை.
- ஆண் ஒருவரால் பலவந்தமாகப் பாலுறவில் ஈடுபட்டதால், மனிதரிடமிருந்து பிரிந்து போகிறாள்.
- குழந்தைப் பருவத்தில் ஆண்களால் புண்படுத்தப்பட்டு, தள்ளப்பட்டதால் ஆண்களிடமிருந்து ஒதுங்கி வாழ்கிறாள்.
- குடும்பத்தாரால் ஆண்பிள்ளைகள் அதிகமாய் நேசிக்கப்படுவதைக் காண்பது.
- தனது மேலதிகாரிகளோடு எதிர்த்து நின்றால் தான் அதிகமாகச் செயல்பட முடியும் என்று உணருகிறாள்.

- மத சம்பந்தமான உண்மைகளை நேசிப்பது போல் நடிந்து அவைகளைக் கடைப்பிடிக்காத மாய்மாலமான தகப்பனை எதிர்க்கிறாள்.
- பெண்களுக்கெதிராகச் செயல்படும் தன் தகப்பனாரைத் தள்ளிவிடுகிறாள்.

முடிவு :

தனக்குத் தெரியாமலே முடிவுக்கு வருகிறாள். *ஆண்கள் பாதுகாப்பற்றவர்கள், நான் பெண்களோடேயே உறவு வைத்துக் கொள்ளுகிறேன்.* இப்படியாக ஓரினச் சேர்க்கையில் இறங்கி விடுகிறாள். தன் மகளை அன்போடு கவனிக்கும் தகப்பன், தன் மகளுடைய பெண்மையைப் பாதுகாப்பதில் மிகப் பெரிய உதவி செய்யக் கூடும். அந்த உதவி கிடைக்காவிட்டால் மகள் கசப்பினால் நிறைந்து, ஆண்களை நம்புவதற்குப் போதிய தைரியம் இல்லாமல் போகலாம் (கொலோசெயர் 3:21).

## தேவன் நம்பிக்கை தருகிறாரா?

உன் வாழ்க்கையின் கட்டுப்பாடுகளைப் பரலோகப் பிதாவின் கரங்களில் ஒப்புவிப்பதைத் தெரிந்து கொண்டால், இயேசு கிறிஸ்துவை உன் ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்டால், அவர் உன் எல்லாப் பாவங்களையும் மன்னித்து, உன் இருதயத்தைக் கிழித்துவிடக்கூடிய பாலியல் விருப்பங்களை மேற்கொள்ள உனக்கு வல்லமை கொடுப்பார்.

நீங்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்து, உங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்குக் கொடுத்திருந்தால், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது நீங்கள் ஒரு ஓரினச்சேர்க்கைப் பாவத்தில் கடினப்பட்டுப் போகவில்லை. உங்களால் மாற்றமடைய முடியும் என்று நினையுங்கள்.

வேதாகமம் ஒரு போதும் பொய் சொல்லாது. அநேக ஓரினச்சேர்க்கையர் மாறி இருப்பதாக வேதாகமம் கூறுகிறது (1 கொரிந்தியர் 6:11). நீதியுள்ள நியாயாதிபதி உங்கள் மேல் உள்ள குறையை "தவறாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது" என்று கூறுகிறார். இப்போது, உங்கள் புதிய ஆள் தத்துவத்தில் வாழுங்கள். புதிதாகக் கண்டு கொண்ட சுதந்தரத்தின் வெளிச்சத்தில் நடவுங்கள்!

*"ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலை கொண்டிருங்கள்"*
(கலாத்தியர் 5:1).

## சுதந்தரம் அடைவதற்கு வழி என்ன?

அந்த மணல் குழியிலிருந்து ஏறி வெளியே வாருங்கள். தேவனுடைய வசனமாகிய உறுதியான சத்தியத்தில் உறுதியாக நில்லுங்கள். உங்களுக்காக தேவன் வைத்துள்ள உங்கள் பாலியல் சம்பந்தமான அவருடைய பரிபூரணமான திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் பொழுது நீங்கள் விடுதலையின் பாதையில் வந்து சேர்ந்திருப்பதைக் காண்பீர்கள்.

உங்கள் நடத்தை மாற்றுவதில் நீங்கள் தொடரும் இடம் திட்டமான வார்த்தைகளைப் பேசுவதில்தான் உள்ளது.

**உங்களிடம் தேவன் கொண்டுள்ள நித்தியமான அன்பை மனதில் நிறுத்தி நோக்குங்கள்.**

- தேவன் உங்களை எவ்வளவு அதிசயமாய்ப் படைத்திருக்கிறார் என்பதற்காக அவருக்கு மரியாதை செலுத்துங்கள்.
- உங்களுக்கு தேவன் வைத்திருக்கும் அழைப்புக்குப் பதில் கூறுங்கள்.

*"அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்;*
*ஆதலால் காருணியத்தினால் உன்னை*
*இழுத்துக் கொள்ளுகிறேன்"*
(எரேமியா 31:3).

**உங்கள் எதிர்மறையான உணர்வுகளெல்லாவற்றையும் ஒத்துக் கொள்ளுங்கள், அதில் எவையெல்லாம் கடந்தகால வேதனையுடன் இணைந்தது என்று பாருங்கள்.**

- உங்கள் உணர்வுகளுக்கு உங்கள் மேலிருந்த கட்டுப்பாட்டை எறிந்து விடுவதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் குழந்தைப் பருவத்தின் உணர்ச்சிகளினாலுண்டான அடிமைத்தனத்தை தேவன் உடைத்துப் போட வேண்டுமென்று ஜெபியுங்கள்.

*"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்;*
*அவைகளை அறிக்கை செய்து விட்டு*
*விடுகிறவனோ இரக்கம் பெறுவான்"*
(நீதிமொழிகள் 28:13).

**உங்கள் அறிவுக்கு ஒவ்வாத உணர்வுகளின் அடிப்படையில் செயலாற்ற மறுத்து விடுங்கள்.**

- எதிர்மாறான உணர்வுகள் உங்களைத் தகுதியற்ற நடத்தைக்கு தள்ளும்போது உங்களிடமே உண்மையைக் கூறுங்கள்.
- சங்கீதம் 4:4; நீதிமொழிகள் 29:11; பிரசங்கி 7:9; ரோமர் 6:11; பிலிப்பியர் 4:19; யாக்கோபு 1:19-20 முதலிய வேதாகம பகுதிகளை மனப்பாடம் செய்து அந்த உண்மைகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

*"நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடிக்கு*
*உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்"*
(சங்கீதம் 119:11).

**மன்னிப்பைப் பிரதானமாகக் கொள்ளுங்கள்.**

- பிறரை மன்னிக்காதது பாவம் என்று அறிக்கையிடுங்கள்.
- கடந்த காலங்களில் உங்களை வேதனைப்படுத்தினவர்களை மன்னிப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

*"மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள்;*
*அப்பொழுது நீங்களும் ஆக்கிளைக்குள்ளாகத்*
*தீர்க்கப்படாதிருப்பீர்கள்"*
(லூக்கா 6:37).

**பாலியல் சோதனைக்கு உங்களைத் தூண்டிவிடும் காரியங்களைப் புரிந்து கொள்வதுடன், அவற்றை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.**

- உங்கள் கடந்தகாலத் தோல்விகளுக்கான பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள்.
- பாலியல் சோதனையைத் தூண்டிவிடக்கூடிய எந்தக் காரியத்தையும் தவிர்த்து விடுங்கள்.

*"அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு,*
*சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்"*
(யாக்கோபு 1:14).

**நீங்கள் தேவனால் நேசிக்கப்பட்ட "தேவனுடைய பிள்ளை" என்ற உண்மையான உங்கள் தனித்தன்மையைப் பற்றிக் கொண்டு, அவரைப் பிரியப்படுத்துவதில் கவனம் செலுத்துங்கள்.**

- தேவன் உங்களை எப்படிப்பட்ட நபராக, எந்தப் பாலாகப் படைத்தாரோ அந்த நபராக இருப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- தேவனுடைய சத்தியத்தை உங்கள் உள்ளத்தில் மறைத்து வையுங்கள். மனப்பாட வசனங்கள் ஏசாயா 43:1; எசேக்கியேல் 36:26-27; ரோமர் 6:4; பிலிப்பியர் 1:6; 1 யோவான் 3:1.

*"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்"*
(கலாத்தியர் 2:20).

## உங்கள் வேதாகம ஜெபத் திட்டம்

1 கொரிந்தியர் 6:18-20; 10:13

2 கொரிந்தியர் 5:17

எபிரெயர் 4:15

ரோமர் 6:11-12

2 பேதுரு 1:3

லேவியராகமம் 19:2

பிலிப்பியர் 4:13

லூக்கா 1:37